புதுவை அரசு
வேளாண் & விவசாயிகள் நலத்துறை
அரசு வேளாண் பொறியியல் பணிமனை அலுவலகம்,
நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, புதுச்சேரி - 1
=* * * *=

எண்.36/வே.து/அ.வே.பொ.ப/2018-19 புதுவை, நாள் :03-02-2019

# அறிவிக்கை

புதுவை அரசு, வேளாண் துறையில் 2018-19 ம் நிதி ஆண்டில் மத்திய அரசின் **“வேளாண் இயந்திரமய துணை திட்டம்”** [Sub - Mission on Agricultural Mechanization (SMAM)] என்ற திட்டத்தின் படி புதுவை பிராந்தியத்தில் ஐந்து ஆண்டுக்கு குறையாமல் வசித்துவரும் **பொது மற்றும் அட்டவணை** இன விவசாயிகள் டிராக்டர் வாங்க மானியத்தொகை பெறுவதற்கு. தகுதி வாய்ந்த விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வரிசை எண் | வேளாண் இயந்திரத்தின் பெயர் | குறைந்த பட்ச நிலத்தின் அளவு (எக்-ஆர்-சா) | |
|---|---|---|---|
| | | பொது விவசாயிகள் | அட்டவணை இன விவசாயிகள் |
| 1. | **டிராக்டர் (இரு சக்கர இயக்கம்)** | 1 - 20 - 00 | 0 - 80 - 00 |

வழங்கப்படவிருக்கும் மானியத்தொகை விவரம்

| வரிசை எண் | டிராக்டரின் (இரு சக்கர இயக்கம்) பயனுறு குதிரை திறன் [Power Take-off horse power] | அட்டவணை, பழங்குடி, சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகள் | | இதர விவசாயிகள் | |
|---|---|---|---|---|---|
| | | அதிகபட்ச மான்ய தொகை | மான்ய விழுக்காடு | அதிகபட்ச மான்ய தொகை | மான்ய விழுக்காடு |
| 1. | **8 இருந்து 20 வரை (2WD)** | ₹.2,00,000/- | 50% | ₹.1,60,000/- | 40% |
| 2. | **20 மேல் 40 வரை (2WD)** | ₹.2,50,000/- | 50% | ₹.2,00,000/- | 40% |

2, **மேலும் கடந்த** 2016-17 நிதி **ஆண்டில்** மாநில **அரசு திட்டத்தின்** கீழ் டிராக்டர் **மானியம் பெற விண்ணப்பித்த நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் நடப்பு 2018-19 நிதியாண்டில் நடைமுறைபடுத்த இயலாது.**

3. மேற்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள சாகுபடி பரப்பிற்கு குறையாமல் புதுவை மாநிலத்தில் பயிர் செய்யும் சொந்தமான நிலங்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன் வாங்கப்படும் இயந்திரங்கள் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றவைகளாக இருக்க வேண்டியது அவசியம் என்று விண்ணப்பதாரர்களுக்கான தகுதி நிலையாக வரையறுக்கப்பட்டுள்ளது.

4. எனவே டிராக்டர் வாங்க மானியம் பெறுவதற்கான விண்ணப்பம் அரசு வேளாண் பொறியியல் பணிமனை, நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, வம்பா கீரப்பாளையம், புதுச்சேரி 605001, துணை இயக்குநர் (வேளாண் பொறியியல்) அவர்கள் அலுவலகத்திலும், சம்பந்தப்பட்ட உழவர் உதவியகங்களிலும் **04-02-2019** முதல் **25-02-2019** வரை வழங்கப்படவுள்ளது. மேலும் வேளாண் துறையின் இணைய தளமான **“http://agri.puducherry.gov.in”**ல், விண்ணப்ப படிவத்தை இணையிறக்கம் செய்து கொள்ளலாம். முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் மேற்கண்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய **கடைசி நாள் 04 -03-2019** ஆகும்.

(சு.சுந்தர் )
துணை இயக்குநர்(வே.பொ.)